அரக்கோணத்தில் 110 மி.மீ. மழை கொட்டித் தீர்த்தது

தமிழகத்தில் ஜூன் 13 வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூன் 7: தமிழகத்தில் அதிகபட்சமாக ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் வெள்ளிக்கிழமை காலை வரை 110 மிமீ மழை பெய்தது. மேலும், சனிக்கிழமை (ஜூன் 8) முதல் ஜூன் 13 வரை தமிழகத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்னிந்திய பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதனால், சனிக்கிழமை (ஜூன் 8) முதல் ஜூன் 13 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யவாய்ப்புள்ளது.

வெள்ளிக்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மிமீ): அரக்கோணம் (ராணிப்பேட்டை) 110, கொட்டாரம் (கன்னியாகுமரி), திருவாலங்காடு (திருவள்ளூர்), பந்தலூர் (நீலகிரி) தலா 100, மடத்துக்குளம் (திருப்பூர்), குருந்தன்கோடு (கன்னியாகுமரி), வாலாஜாபாத் (காஞ்சிபுரம்), தொண்டி (ராமநாதபுரம்) தலா 90, வெம்பாக்கம் (திருவண்ணாமலை), மொடக்குறிச்சி (ஈரோடு), கடலூர் , நாகர்கோவில் (கன்னியாகுமரி) தலா 80, மைலாடி (கன்னியாகுமரி), வனமாதேவி (கடலூர்), வேதாரண்யம் (நாகப்பட்டினம்), வாணியம்பாடி (திருப்பத்தூர்), அருப்புக்கோட்டை (விருதுநகர்), கோவிலாங்குளம் (விருதுநகர்), திருவாடானை (ராமநாதபுரம்), பேரையூர் (மதுரை), சின்னக்கல்லார் (கோவை), குளச்சல் (கன்னியாகுமரி), சேந்தமங்கலம் (நாமக்கல்)– தலா 70. இதுபோன்று பல்வேறு இடங்களில் குறிப்பிடத்தக்க அளவு மழை பெய்துள்ளது.

வெயில் அதிகரிக்கும்: தமிழகத்தில் மழை பெய்து வரும் காரணத்தால் எந்த இடத்திலும் 100 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவாகவில்லை.

இதைத்தொடர்ந்து, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சனிக்கிழமை (ஜூன் 8) முதல் ஜூன் 11 வரை அதிகபட்ச வெப்ப நிலை 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக அதிகரிக்கும்.

சென்னை: சென்னையில் வெள்ளிக்கிழமை காலை வரை அயனாவரத்தில் 50 மில்லி மீட்டரும், ராயபுரம், அடையார் ஆகிய இடங்களில் தலா 40 மிமீ–யும் மழை பதிவாகி உள்ளது. சென்னையில் ஒரு சில இடங்களில் ஜூன் 8, 9–ஆகிய தேதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: குமரிக்கடல் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளிலும், தமிழக கடலோரப் பகுதிகளிலும் ஜூன் 8 முதல் ஜூன் 11 வரை மணிக்கு 55 கிமீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இதனால் மீனவர்கள் இந்தப் பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி பதவியேற்பு விழாவில் பங்கேற்க தமிழக பெண் லோகோ பைலட்டுக்கு அழைப்பு

சென்னை, ஜூன் 7: தில்லியில் நடைபெறவுள்ள பிரதமர் மோடியின் பதவியேற்பு விழாவுக்கு தெற்கு ரயில்வேயை சேர்ந்த பெண் லோகோ பைலட் (ரயில் ஓட்டுநர்) ஐஸ்வர்யா எஸ்.மேனனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரயில்வே லோகோ பைலட் ஐஸ்வர்யா எஸ்.மேனன்.

மக்களவைத் தேர்தலில் பெரும்பான்மை பெற்ற பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கிறது. ஞாயிற்றுக்கிழமை இந்த பதவியேற்பு விழா புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பதவியேற்பு விழாவுக்கு தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்தைச் சேர்ந்த பெண் லோகோ பைலட் ஐஸ்வர்யா எஸ்.மேனனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வந்தே பாரத், ஜன சதாப்தி உள்ளிட்ட முக்கிய ரயில்களை ஐஸ்வர்யா அதிக பயண நேரங்கள் இயக்கியுள்ளார்.

சென்னை–விஜயவாடா, சென்னை கோவை இடையே இயக்கப்படும் வந்தே பாரத் ரயில்கள் தொடங்கிய நாள்முதல் அந்த ரயில்களை இவர் இயக்கி வருகிறார். குறிப்பாக, ரயில்வே சமிக்ஞைகளை (சிக்னல்) உடனடியாக உள்வாங்கி செயல்பட்டதற்காக ரயில்வே அதிகாரிகளால் பாராட்டுப் பெற்றுள்ளார்.

புதுதில்லியில் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 9) நடைபெறும் பிரதமர் பதவியேற்பு விழாவில் பங்கேற்க ஐஸ்வர்யா விமானத்தில் புறப்பட்டுச் செல்கிறார். அவருக்கு சக ஊழியர்கள் பலர் வாழ்த்து தெரிவித்தனர்.

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.

பெருநிறுவன அலுவலகம் / தலைமை அலுவலகம்: **GICHFL**, நேஷனல் இன்சூரன்ஸ் கட்டடம், 6ஆவது தளம், **J.T** சாலை, அஸ்டோரியா உணவகம் அருகில், சர்ச்கேட், மும்பை-400020.
தொ.பே.: (022) 4304 1900. மின்னஞ்சல்: corporate@gichf.com இணையத்தளம்: www.gichfindia.com
சென்னை கிளை முகவரி: எண். 480, கிவ்ராஜ் வளாகம், பிளாக்-2, 2ஆவது தளம், நந்தனம், அண்ணா சாலை, சென்னை-600035.
அலுவலக தொ.பே.: 044-42034896/97/99 தொடர்பு விவரம்: 9894601538 கிளை மின்னஞ்சல் முகவரி: chennai@gichfindia.com
போரூர் கிளை: எண். 1/163, 1ஆவது தளம், மவுன்ட் பூந்தமல்லி நெடுஞ் சாலை, ஐயப்பன்தாங்கல் பேருந்து நிலையம் அருகில், பாரத் பெட்ரோல் பங்கு எதிரில், ஐயப்பன்தாங்கல், சென்னை-600056. அலுவலக தொ.பே.: 044-4957 1149
கிளை மின்னஞ்சல் முகவரி: Porur@Gichfindia.com தொடர்பு விவரம் பிரவீன் P - 9791113981

E-ஏல விற்பனை அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ளவர் **GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., (GICHFL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக** இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினைப் பின்வரும் கடன்தாரர்களுக்கு / அடமானதாரர்களுக்கு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். எனினும் கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் குறிப்பிட்ட நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14 அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-இன் கீழான உரிமைகளைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொத்துக்களை **நேரடி சுவாதீனம்** செய்துள்ளார்.

வ. எண்.	கடன் கோப்பு எண் / கடன்தாரர்/ கூட்டுக் கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ கிளை பெயர்	சொத்தின் முகவரி / சொத்தின் அளவு (கட்டடப்பரப்பு ச.அடியில்)	கோரிக்கை அறிவிப்பு வெளியிட்டு நாள்	நேரடி சுவாதீன நாள்	31.05.2024 நாள்படி மொத்த நிலுவைத்தொகை (POS, வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட) (ரூபாயில்)	குறைந்தபட்ச விலை (ரூபாயில்)
1.	**TN0050110002271 / சென்னை கிளை / K S மணிகண்டன் (கடன்தாரர்)**	ஸ்ரீ சாய் ஃபிளாட்ஸ், அடுக்கக எண் C, முதல் தளம், மனை எண் 14, திருவள்ளூர் 4ஆவது குறுக்குத் தெரு, ராஜ்பாய் நகர் விரிவு, பருதிப்பட்டு, சென்னை – 600054. **பிரிபடாப்பங்கு - 620 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு - 1037 சதுர அடி**	20.08.2018	18.02.2019	7607942/-	3717565/-
2.	**TN0050610002439 / சென்னை கிளை / M சுமதி (கடன்தாரர்) J. மணி (கூட்டுக் கடன்தாரர்)**	அடுக்கக எண் F1, MKB-2, 1ஆவது தளம், B பிளாக், மனை எண் 9D 10A & 10B, மதுரம் நகர் விரிவு, கொளுத்துவாஞ்சேரி, சென்னை – 600122. **பிரிபடாப்பங்கு - 280 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு - 780 சதுர அடி**	22.05.2019	10.01.2022	5028722/-	2730000/-
3	**TN0050610002398 / சென்னை கிளை / ஜனனி Y (கடன்தாரர்) J. சத்யபாமா (கூட்டுக் கடன்தாரர்)**	அடுக்கக எண் F2, 1ஆவது தளம், A பிளாக், மனை எண் 9D 10A & 10B, மதுரம் நகர் விரிவு, கொளுத்துவாஞ்சேரி, சென்னை – 600122. **பிரிபடாப்பங்கு - 284 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு - 780 சதுர அடி**	27-08-2021	10-01-2022	3935395/-	2781508/-
4	**TN0050110001249 / சென்னை கிளை / மணிகண்டன் R (கடன்தாரர்) நாராயணன் .R ஜாமீன்தாரர்)**	மனை எண் 103 J J நகர் கட்டம் - 1, பெரியபாளையம் கிராமம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம் - 601103. **நிலத்தின் பரப்பளவு - 1200 சதுர அடி.**	21-11-2022	20-08-2023	1406970/-	1267000/-
5	**TN0050610002171 & TN0050610002019 / சென்னை கிளை / P.E. ஸ்ரீதர்**	அகில் ஃபிளாட்ஸ், G-2, தரைத்தளம், மனை எண் 3, கோவிந்தசாமி நகர், 11ஆவது தெரு, மடிப்பாக்கம், சென்னை – 600091. **பிரிபடாப்பங்கு - 400 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு - 880 சதுர அடி**	14-07-2022	25-11-2023	4823992/-	3727757/-
6	**TN0050110002610 / சென்னை கிளை / ஜெரோம் ஜெபா கிளின்டன் (கடன்தாரர்) S. சேசுராஜ் (கூட்டுக் கடன்தாரர்)**	வீட்டு எண்-G1, தரைத்தளம், மனை எண் 5. A V P அவென்யூ, கூடுவாஞ்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம் - 603202. **பிரிபடாப்பங்கு - 400 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு - 800 சதுர அடி**	27-08-2021	24-01-2024	3989557/-	2695722/-
7	**TN0050110002565 / சென்னை கிளை / A சேஷாத்திரி (கடன்தாரர்) S. ரமணி (கூட்டுக் கடன்தாரர்)**	பிருந்தாவனம் ஃபிளாட்ஸ், வீட்டு எண் S1, சாலை பக்கம் உள்ள அடுக்கக்கம், 2ஆவது தளம், மனை எண் 238, அருள் நகர், கூடுவாஞ்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம் - 603202. **பிரிபடாப்பங்கு - 395.61 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு - 889 சதுர அடி**	12-05-2023	11-12-2023	3224720/-	2722424/-
8	**TN0050110002642 / சென்னை கிளை / R செல்வராஜ் (கடன்தாரர்) மகேஸ்வரி S (கூட்டுக் கடன்தாரர்)**	சடையப்பன் என்கிளேவ், அடுக்கக எண் F-1, முதல் தளம், பஜனை கோவில் இரண்டாவது தெரு, சித்தாலப்பாக்கம், சென்னை – 600126. **மேல்கட்டுமானப் பரப்பு - 1050 சதுர அடி, பிரிபடாப்பங்கு - 500 சதுர அடி**	21-03-2022	19-02-2024	4265143/-	3100000/-
9	**TN0051300109233 / சென்னை கிளை / R S M பார்த்திபன் (கடன்தாரர்)**	மனை எண் 360, ஸ்ரீ விஜயலக்ஷ்மி நகர், அலமாதி கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் - 600052. **நிலத்தின் பரப்பளவு 3100 சதுர அடி.**	22-08-2011	13-02-2012	8738488/-	2100000/-
10	**TN0050610001897 / சென்னை கிளை / E. மகேஷ் குமார் (கடன்தாரர்) C. கவிதா (கூட்டுக் கடன்தாரர்)**	அடுக்கக எண் F3, 1ஆவது தளம், மனை எண் 46 & 47 பாகம், மகாலக்ஷ்மி நகர் பிரதான சாலை, முகலிவாக்கம், சென்னை – 600125. **பிரிபடாப்பங்கு - 394 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு - 984 சதுர அடி**	10-12-2015	21-10-2016	10163243/-	3923121/-
11	**TN0050610001783 / சென்னை கிளை / சேகர் முனியாண்டி கிருஷ்ணன் (கடன்தாரர்) சேகர் கலைச்செல்வி (கூட்டுக் கடன்தாரர்)**	அடுக்கக எண் S1 & S2, 2ஆவது தளம், மனை எண் 8, அன்னை நகர், முடிச்சூர், சென்னை – 600048. **S1: பிரிபடாப்பங்கு - 384 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு - 960 சதுர அடி S2: பிரிபடாப்பங்கு - 420 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு - 1050 சதுர அடி**	18-08-2016	28-01-2017	19565984/-	7438616/-
12	**TN0640600000197 / போரூர் கிளை / ஸ்ரீராம் ரங்கராஜன் (கடன்தாரர்)**	கேட் எண்: 2/2B & 2/2C, மவ் மாணிக்கம் அவென்யூ, முதல்தளத்தில் உள்ள அடுக்கக எண் F1, மனை எண் 23, கஸ்பாபுரம் கிராமம், சென்னை – 600 126. **பிரிபடாப்பங்கு-389 சதுர அடி, மேல்கட்டுமானப் பரப்பு-864 சதுர அடி**	21-06-2021	24-03-2023	4869835/-	2913805/-

E-ஏல நாள் மற்றும் நேரம்: **26.06.2024** அன்று **(https://www.bankauctions.in)** இணைய முகப்பில் **பிற்பகல் 03:00 மணி முதல் பிற்பகல் 04:00 மணி** வரை, தலா 5 நிமிடம் எண்ணிக்கை வரம்பற்ற காலநீட்டிப்புடன்.

விலைப்புள்ளியை / மூடி முத்திரையிடப்பட்ட ஏலப்புள்ளியை உரிய விலைப்புள்ளிப் படிவத்தில் டேவணித்தொகை (EMD) மற்றும் வாடிக்கையாளர் விவரங்களுடன் (KYC) இணைய வழியிலோ மேற்குறிப்பிட்ட GICHF அலுவலகத்திலோ தாக்கல் செய்யக் கடைசி நாள்: **24.06.2024** அன்று அல்லது அதற்குமுன்.

மேலும் மேற்கண்ட சொத்துக்களின் / உடைமைகளின் (SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் விதிகளின்படியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான) E-ஏல விற்பனைக்கான இந்தப் பொது அறிவிப்பின் மூலம் குறிப்பிட்ட சொத்துக்களை "உள்ளது உள்ள இடத்தில்" மற்றும் "உள்ளது உள்ளபடி" எனும் முறையில் வாங்குவதற்கான விலைகோரல்கள் மூடி முத்திரையிட்ட உறைகளில் அல்லது இணைய வழியில் GICHFL நிறுவனத்தால் வரவேற்கப்படுகின்றன.

ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

1. E-ஏலமானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "மாற்று எதுவும் வழங்கப்படமாட்டாது" எனும் அடிப்படைகளில் இணையவழியில் நடைபெறும். இந்த E-ஏலம் GICHF நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட E-ஏலச் சேவை வழங்குநரான "M/s. 4closure" நிறுவனத்தால் நடத்தப்படும்.
2. **ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் பெயரை https://bankauctions.in எனும் இணைய முகப்பில் பதிவு செய்து கொண்டு தங்களுக்கான பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். கலந்து கொள்ள இருக்கும் ஏலதாரர்கள் E-ஏலத்துக்கான இணைய வழிப் பயிற்சியைப் பின்வரும் சேவை வழங்குநரிடம் பெறலாம்: M/s. 4closure, # 605 A, 6வது தளம் மைத்ரிவனம், அமீர்பேட்டை, ஹைதராபாத் - 500038, தெலுங்கானா. அலுவலக தரைவழி இணைப்பு எண்: 040-23736405; பின்வரிசை குழு : 8142000062 / 66, திரு. பிரகாஷ் - 8142000064 / 8142000725, prakash@bankauctions.in, திரு. தினேஷ் - மொபைல் எண். 8142000735 மற்றும் அஞ்சல் : dinesh@bankauctions.in, சொத்து விசாரணை, தொடர்பு விவரங்கள் : 9894601538 (சென்னை கிளை), 9791113981 (போரூர் கிளை)**
3. E-ஏல விற்பனையானது SARFAESI சட்டம் / விதிகள் 2002-இன் கீழான விதிமுறைகளுக்கும் கீழே / இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் ஆர்வமுள்ள / கலந்து கொள்ளும் ஏலதாரர்களால் தாக்கல் செய்யப்பட உள்ள விலைகோரல் / ஏலப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டது.
4. இணைய வழி E-ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர் ஒவ்வொருவருக்கும் சொந்த மின்னஞ்சல் முகவரி இருக்க வேண்டியது கட்டாயமானது.
5. ஆர்வமுள்ள ஏலதாரர் ஒருவர் GICHF நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் முன்னிலையில் தகுதியுள்ள விலைப்புள்ளிதாரராக முறையாகப் பதிவு செய்யப்பட்டவுடன் அவர் ஆவணத்தைத் தாக்கல் செய்து இணைய முகப்பின் வழியே E-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான தனது ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும். E-ஏலச் சேவை வழங்குநரிடமிருந்து தனக்கான பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பெற வேண்டியது விலைப்புள்ளிதாரரின் / இணைய வழி ஏலதாரரின் தனிப்பட்ட பொறுப்புக்குரியது.
6. மேற்கண்ட சொத்துக்கள் மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச விலைக்குக் கீழே விற்பனை செய்யப்பட மாட்டா.
7. **ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையைக் (EMD) கேட்பு வரைவோலை / RTGS / NEFT மூலம் GIC HOUSING FINANCE LTD எனும் பெயருக்குச் செலுத்த வேண்டிய வங்கி விவரங்கள் பின்வருமாறு: வங்கியின் பெயர்: யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா, கணக்கு எண்: 005111010000039, கணக்கின் பெயர்: GIC HOUSING FINANCE LTD AUCTION COLLECTION A/c, கிளையின் பெயர்: LCB ஃபோர்ட் முகவரி: UBI 239 பேக்பே ரெக்லேமேஷன் நரிமன் பாயிண்ட் மும்பை மகாராஷ்டிரா அஞ்சல்குறியீடு- -400021, IFSC எண்: UBIN0800511.**
8. வெற்றி பெறும் ஏலதாரர்களைப் பொறுத்த வரையில் அவர்களது மேற்கூறிய வைப்புத்தொகைகள் பின்னர் கழித்துக் கொள்ளப்படும். மற்றவர்களுக்கு அவை திருப்பி அளிக்கப்படும். டேவணித்தொகைக்கு (EMD) வட்டி ஏதும் கிடையாது.
9. மேற்கூறிய டேவணித்தொகையுடன் (EMD) கூடிய விலைகோரல்களை இணைய வழியில் தாக்கல் செய்ய வேண்டிய இணைய முகப்பு: https://bankauctions.in/. இத்துடன் டேவணித்தொகையும் நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை மற்றும் முகவரிச் சான்று முதலான வாடிக்கையாளர் விவர ஆவணங்களின் (KYC) நகல்களும் இணைக்கப்பட்டுச் சேவை வழங்குநரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும். அல்லது ஏலப் படிவம், டேவணித்தொகை மற்றும் வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் ஆகியவற்றை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட உரிய கிளை அலுவலகங்களுக்கு வந்து சேருமாறு தாக்கல் செய்ய வேண்டும்.
10. விலைப்புள்ளிகள் திறக்கப்பட்ட பின் குறைந்தபட்ச விலைக்குக் குறையாமல் ஏலம் கோரியுள்ள ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கு அதிகாரப்பூர்வ அலுவலரின் தனிப்பட்ட விருப்புரிமையின் பேரில் ஏலத்தொகையை உயர்த்திக் கோர வாய்ப்பு வழங்கப்படும்.
11. வெற்றி பெறும் ஏலதாரர்கள் ஏற்கெனவே செலுத்திய டேவணித்தொகை (EMD) போக, விற்பனை விலையில் 25% தொகையை விற்பனைக்கான அதிகாரப்பூர்வ அலுவலரால் விலைகோரல் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடனே செலுத்த வேண்டும். தவறினால் டேவணித்தொகை பறிமுதல் செய்யப்படும். விற்பனை விலையில் மீதமுள்ள 75% தொகையை அதிகாரப்பூர்வ அலுவலரின் விருப்புரிமையின் பேரில், விற்பனை உறுதி செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் செலுத்தலாம். இந்தக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மீதத் தொகையைச் செலுத்தத் தவறினால், ஏற்கெனவே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும். பறிமுதல் தொடர்பாக வெற்றி பெற்ற ஏலதாரருக்கு அதிகாரப்பூர்வ அலுவலர் அறிவிப்பு ஏதும் அனுப்ப வேண்டியதில்லை.
12. ஏலதாரர்கள் "கேவியட் எம்ப்ட"ருக்குக் (வாங்குவோர் எச்சரிக்கை) கட்டுப்பட்டவர்கள் என்பதால் கடனீட்டுச் சொத்து அல்லது நிறுவனத்தின் மீது வில்லங்கங்கள், சட்டப்படியான பொறுப்புக்கூறல்கள், சொத்து வரி - வருமான வரி - ஆயத் தீர்வை போன்ற நிலுவைகள், தொழிலாளர் நிலுவைகள், மின்சாரம் மற்றும் பராமரிப்பு நிலுவைகள் முதலானவை ஏதேனும் உண்டா என்பது குறித்துத் தாங்களே சொந்தமாக ஆழ்ந்து விசாரித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் விற்பனை விலை மட்டுமின்றி நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கக் கட்டணங்கள், மின் கட்டணங்கள், குடிநீர்க் கட்டணங்கள், முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணங்கள் (விதிக்கப்பட்டால்) முதலான அனைத்துச் செலவுகளும் சொத்துக்கள் தொடர்பான அனைத்துப் பிற இடைநிகழ் கட்டணங்கள், செலவினங்கள் முதலான அனைத்துச் செலவுகளும் வெற்றி பெற்ற ஏலதாரர்களையே சாரும்.
13. விற்பனைச் சான்றிதழுக்காகச் செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணம், முத்திரைத் தீர்வை, வரிகள் போன்ற கட்டணங்களும் வெற்றி பெற்ற ஏலதாரர்களின் பெயருக்குக் கடனீட்டுச் சொத்தை மாற்றுவதற்காக வேறு ஏதேனும் தீர்வைகள் செலுத்த வேண்டியிருந்தால் அவையும் வெற்றி பெற்ற ஏலதாரர்களையே சாரும்.
14. விற்பனைச் சான்றிதழானது மொத்த / விற்பனைத் தொகையும் வரப்பெற்ற பிறகு மட்டுமே, அதுவும் வெற்றி பெற்ற ஏலதாரரின் பெயரில் மட்டுமே வழங்கப்படும்.
15. இதன் மூலம் கடன்தாரர்கள், அடமானதாரர்கள், ஜாமீன்தாரர்கள் ஆகியோருக்கு அறிவிப்பது யாதெனில், மேற்கூறிய சொத்துக்களை E-ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப வாங்க ஆர்வமுள்ள வாங்குநர்களை / கொள்முதலாளர்களை அவர்கள் அழைத்து வரலாம்.
16. மேற்கூறிய சொத்துக்களின் ஆய்வு, கோரிக்கையில் பேரிலும் அதிகாரப்பூர்வ அலுவலரின் வசதிக்கேற்பவும் நடைபெறும்.
17. அதிகாரப்பூர்வ அலுவலர் உச்சபட்ச விலைகோரலையோ வேறெந்த விலைகோரலையோ அனைத்து விலைகோரல்களில் எதையுமோ ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை. மேலும் எந்தக் காரணமும் தெரிவிக்காமல் எந்த விலைப்புள்ளியையும் அல்லது அனைத்து விலைப்புள்ளிகளையும் ஏற்கவும் தள்ளுபடி செய்யவும் அவருக்கு உரிமை உண்டு.
18. மேற்கூறிய சொத்துக்களின் மீது நிலுவையில் இருக்கக்கூடிய எந்தப் பொறுப்புக்கூறல் தொடர்பாகவும் GICHFL பொறுப்பேற்காது. சொத்துக்கள் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "மாற்று எதுவும் வழங்கப்பட மாட்டாது" எனும் அடிப்படைகளிலேயே ஏலம் விடப்படும்.

SARFAESI சட்டம் 2002 -இன் கீழான 30 நாள் விற்பனை அறிவிப்பு

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றையும் சொத்துக்களின் முழு விவரத்தையும் அறிய அணுக வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட E-ஏலச் சேவை வழங்குநரான M/s. 4closure நிறுவனத்தின் இணையத்தளம்: https://bankauctions.in.

நாள்: 08.06.2024
இடம்: சென்னை

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., சார்பில்
ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்

போர் வாகனங்கள் ஆய்வு & அபிவிருத்தி நிறுவனம் (CVRDE)

இந்திய அரசு, பாதுகாப்பு அமைச்சகம்
பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கழகம் (DRDO)
ஆவடி, சென்னை-600054

விளம்பர எண்:CVRDE/HR/JRF/2024-25

இளநிலை ஆய்வர் இருக்கை (JRF)-2024 நியமனத்துக்கான விளம்பரம்

போர் வாகனங்கள் ஆய்வு & அபிவிருத்தி நிறுவனம் (CVRDE), DRDO, பாதுகாப்பு அமைச்சகம், ஆவடி நிறுவனமானது ராணுவம் & இதர சார்பு நிறுவன சேவைகளுக்கான (விமானப்படை & கப்பல்படை) அதி நவீன ரக கவசப் போர் வாகனங்கள் (AFV-கள்) வடிவமைப்பு & அபிவிருத்தி துறையில் செயலாற்றி வருகிறது. கவசப் போர் வாகனங்கள் (AFV-கள்) அஃதாவது, பீரங்கிமேடை & ஆயுத அமைப்பு, சட்டகம் & வாகன அமைப்பு, ஆற்றல் பெட்டக (இயந்திரம் & ஆற்றல் கடத்தல்) தொழில் நுட்பங்கள், ஒடும் பற்சக்கர தொழில் நுட்பங்கள், வாகன மின்னியல், வாகன மின்னணுவியல் மற்றும் வாகன தகவல் தொடர்பியல் போன்றவை தொடர்பான தொழில் நுட்பங்களில் CVRDE திறன்மிகு வல்லமை பெற்றுள்ளது. மேலும், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம் பெங்களூரு மற்றும் இதர முன்னணி கல்வி நிறுவனங்களுடன் கூட்டு ஆராய்ச்சியையும் CVRDE மேற்கொண்டு வருகிறது.

இளமைத்துடிப்பும் தகுதியும் கொண்ட, AFV தொழில்நுட்பம் தொடர்புடைய துறைகளில் ஆய்வு செய்வதில் ஆர்வம் கொண்ட இந்திய பிரஜைகளை (இளநிலை ஆராய்ச்சியாளர்களாக) அமர்த்த **CVRDE** விரும்புகிறது

பின்வரும் துறைகளில் இளநிலை ஆய்வர் இருக்கை (JRF) தேர்வுக்காக, பிற்சேர்க்கை I இல் குறிப்பிட்டுள்ள படிவத்தின்படி ஆஃப்லைன் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

காலியிடங்கள் எண்ணிக்கை : இருபத்து எட்டு(28) - இளநிலை ஆய்வர் இருக்கை (JRF)

துறை	தேவையான கல்வித் தகுதி	காலியிடங்களின் எண்ணிக்கை*	ஊதியம் & பதவிக்காலம்
மெக்கானிக்கல் எஞ்ஜினியரிங்	ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து முதல் நிலையில்B.E/ B.Tech பட்டம் இதனுடன் இளங்கலை பொறியியலில் திறனாய்வு தேர்வில் செல்லுபடியாகும் மதிப்பெண்ணுடன் (GATE Score) அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து M.E / M.Tech பட்டம். இளங்கலை மற்றும் முதுகலை இரண்டிலும் முதல் நிலையில் தேர்வு. *(வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலிருந்து பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்கள் அதற்கான இணைச் சான்றை "இந்திய பல்கலைக் கழகங்களின் சங்கம், தில்லி" யிலிருந்து பெற்றிருக்க வேண்டும்)* (அதே பிரிவு தொடர்புடைய அல்லது அதற்கு இணையான பொறியியல் படிப்புப்பிரிவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)	13 (பதின்மூன்று)	• மாதத்துக்கு ரூ.37,000/- (தொகுப்பு உதவித்தொகை / தொகுப்பு ஆய்வுதவித் தொகை) • வீட்டு வாடகைப்படி மற்றும் மருத்துவ வசதிகள் விதிகளுக்கிணங்க அனுமதிக்கப்படும். • ஆராய்ச்சியாளர் பணி தொடக்கத்தில் இரண்டு வருடங்களுக்கானதுமாகவும் பிறகு நடப்பிலுள்ள விதிகளின்படி நீட்டிக்கப்படும் தன்மை வாய்ந்ததாகவும் இருக்கும்.
எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் எஞ்ஜினியரிங்		9 (ஒன்பது)	
எலக்ட்ரிகல் & எலக்ட்ரானிக்ஸ் எஞ்ஜினியரிங்		4 (நான்கு)	
கம்ப்யூட்டர் சயின்ஸ் எஞ்ஜினியரிங்		2 (இரண்டு)	

*** நிறுவனத்தின் தேவைக்கேற்ப காலியிடங்கள் எண்ணிக்கை மாறுபடல